**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 21 ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

**O.S. NO. 61/2019**

**பி.வா.சா.1**

**திருமதி. லதா**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு தொடர் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி ( வாதி தரப்பில்)**

பி.வா.சா.ஆ.4 பாகப்பத்திரத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் ஆமாம். என் கணவருக்கு 27.50 ஏக்கரும், என் மூத்த மகளுக்கு 1.50 ஏக்கர் நிலமும், இளைய மகளுக்கு ஒரு ஏக்கரும் ஒதுக்கப்பட்டுள்ளதாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.4 ஆவணமே 2006 பாகப்பிரிவினைக்கு பின்னிட்டு என் கணவர் வேண்டுமென்றே மேற்படி ஆவணத்தை உருவாக்கியுள்ளார் என்றால் சரியல்ல. வாதிக்கு பங்கு சென்றுவிடக்கூடாது என்பதால் தான் பி.வா.சா.ஆ.4 ஆவணம் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் எனக்கு சொத்து எதுவும் ஒதுக்கவில்லை என்றால் சரிதான். என் கணவர் 2006 க்கு முன்பாக அருணை ரமணா கல்வி அறக்கட்டளைக்கு 30-12-2004 ம் தேதியில் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆவணம் பதிவுசெய்யப்பட்ட ஆவணம் என்றால் தெரியாது. 11-07-2026 ல் வாதி நகல் வாங்கி பார்த்த சமயம் தான் தெரியவந்தது என்றால் எனக்கு தெரியாது. என் கணவர்

வாதிக்கு சொத்து சென்றுவிடக்கூடாது என்று பல ஆவணங்களை உருவாக்கியுள்ளார் என்றும், மேற்படி விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றும், அவ்வாறு தெரிந்துகொண்டே நான் பொய்யாக எதிர்வழக்காடி வருகிறேன் என்றால்சரியல்ல. என்னை மீறி என் கணவர் எந்த செயலும் செய்யமாட்டார் என்றால் சரியல்ல. என் கணவர் நோய்வாய்பட்டு இருந்ததால் முழு சொத்தையும் நான்தான் நிர்வாகித்து வந்தேன் என்றால் சரியல்ல. வாதிக்கு எந்தவகையிலும் சொத்து சென்றடையக்கூடாது என்று நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால சரியல்ல.